பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 30 வியாழக்கிழமை 15.09.2022 கதிர் 312

**இது ரகசியம் அல்ல!**

எலிசபெத் மகாராணியின் மறைவை அடுத்து பிரிட்டனின் கோமகனாகி இருப்பவர் அவரது மகன் சாள்ஸ்.

அவர் இளவரசராக இருந்த போது முதலில் காதலித்துக் கரம் பிடித்தவர் அழகி டயானா சீமாட்டி. சாள்ஸ் - டயானா ☞2

# ஜெனிவா பிரேரண நகலில் புதிதாக ஒன்றுமேயில்லை!

## உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுவூட்ட பெயருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது



**ஜெனிவா,செப்ரெம்பர் 15**

**இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையின் வரைவின் முதல் வடிவம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அது இலங்கையில் தோல்வியுற்ற உள்நாட்டுப் பொறிமுறைகளை வலுவூட்ட அழைப்பு விடுக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.** ☞2



## இந்தியா செல்ல முயன்ற எண்மர் மன்னாரில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் செப்.15

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றனர் ☞10

## சீனாவுக்கு எமது கடல் வளத்தை தாரை வார்த்தால் சீறி எழுவோம்!

### வடக்குக் கடற்றொழில் சமூகம் எச்சரிக்கை கடலட்டைப் பண்ணைகள் குறித்தும் விசனம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்.செப்.15

கடலட்டை குஞ்சுகளை கடலில் விட்டு, அட்டைப் பண்ணையை வளைத்து, அதிக லாபம் பெற முடியாது என்பது மீனவ சமூகம் நிதர்சனமாகக் கண்ட உண்மை என தெரிவித்த யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா, சீன நாட்டுக்கு எங்களுடைய கடல் ☞10

## மகசின் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளை மனோ நேரில் சந்தித்தார்



மகசின் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகளை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பி. நேற்று நேரில் போய் சந்தித்தார்.

மகசின் சிறைக்குள்ளே சென்று தமிழ் கைதிகளைச் சந்தித்து விட்டு வெளியே வந்த அவர், பின்னர் ஊடகங்களிடம் கூறியவை வருமாறு:- ☞10

## 25 ஆயிரம் அரச ஊழியர்கள் டிசெ.31 இல் ஒன்றாக ஓய்வு!

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் அரச ☞10

## அரச ஊழியர்களைக் குறைத்து அமைச்சர்களைக் கூட்டுவதா?

### ஜனாதிபதியிடம் 'பவ்ரல்' அமைப்புக் கேள்வி

கொழும்பு,செப். 15

திறமையின்மை அடிப்படையில் அரச ☞2

## களனியவில் சூடு ஒருவர் உயிரிழப்பு

களனிய, பட்டிய சந்தியில் நேற்று மாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவரினால் இவ்வாறு துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ☞2

## கல்முனையில் ஆர்ப்பாட்டம்




(காரைதீவு நிருபர் சகா)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயம் ☞10

## வழிபாட்டுக்குரிய 11 வாள்களை வைத்திருந்த பூசாரி மகன் கைது

வட்டுக்கோட்டை - துணவி பகுதியில் 11 வாள்களுடன் விசேட அதிரடிப்படையினரால் 22 வயதான இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துணவி பகுதியில் நேற்று இரவு 8.00 மணி அளவில் இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது. ☞10

## மஹிந்தவைக் கொல்ல முயன்றனர் எனக் குற்றச்சாட்டு முன்னாள் பொலிஸ் அதிகாரி உட்பட நான்கு பேர் மீது

2009 ஆம் ஆண்டு குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் குண்டுத் தாக்குதல் நடத்தி கொலை செய்ய முயற்சித்தனர் எனத் தெரிவிக்கும் குற்றப்பத்திரங்கள் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரே உள்ளிட்ட 4 பேருக்கு கொழும்பு மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ☞10

## 'கபுடு காக்கா' வை ஒலிக்கச் செய்த சட்டத்தரணி நீதிமன்றால் விடுதலை

வாகனத்தில் கப்புட்டு காக் காக் என்ற ஒலியை எழுப்பினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த சட்டத்தரணியை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் எம்.எஸ்.பிரபாகரன், நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

போக்குவரத்து விதிமீறல் போன்ற குற்றத்தை யாராவது ☞2



## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதலும், திருமணமும் உலகெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயங்கள். திருமணமாகி இரண்டு ஆண் குழந்தைகளும் பெற்ற பின்னர் உறவு கசந்து, இருவரும் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்தனர். அதன் பின்னரும் அழகி டயானா பற்றிய செய்திகள் பரபரப்பாக அடிபட்டன. ஊடகங்கள் அவரைத் துரத்தின. அவர் ஒரு மர்மமான கார் விபத்தில் உயிரிழந்தார். டயானா சீமாட்டியின் மூத்த மகனே இப்போது அடுத்த பட்டத்து இளவரசர்.

சாள்ஸ் - டயானா காதல் கதையும் மன, மண முரண்பாடும் இன்றும் பேசப் படுபவை.

ஆனால் இன்னொரு சாள்ஸ் - டயானா முரண்பாடு இப்போது இலங்கை நாடாளுமன்றத்தை ஒட்டி வெடித்துப் பட்டையைக் கிளப்பி இருக்கின்றது.

இது காதல் சர்ச்சை அல்ல. அரசியல் கருத்து முரண்பாட்டுச் சர்ச்சை.

அதில் சிக்கி இருப்பவரும் ஓர் அழகி டயானாதான். அவர் பிரதி அமைச்சர் டயானா கமகே.

அவருடன் அரசியல் ரீதியில் முரண்பட்டு இருக்கும் சாள்ஸ் நமது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

டயானா கமகே அம்மையார் இப்போது சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர். ஓரிரு தினங்களுக்கு முன்னர் அவர் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

"நாட்டின் சுற்றுலாத்துறை பெருக வேண்டுமென்றால் தலைநகர் கொழும்பு போன்றவை இரவிலும் உயிரோட்டமாக இருக்க வேண்டும். பொழுதுபோக்கு விடயங்கள் தாராளமாக இடம்பெற வேண்டும். மக்கள் சாப்பிட, அருந்தி மகிழ, பொழுது போக்க நகருக்குத் திரண்டு வர வேண்டும். ஆனால் இப்பொழுதெல்லாம் 10 மணியுடன் கொழும்பே ஊறங்கி விடுகிறது. இதை மாற்ற வேண்டும் " - என்றார் டயானா அம்மையார்.

அத்துடன் அவர் விடவில்லை. மன்னாரைப் பற்றியும் ஒரு கதை கூறினார்.

"நாம் சிறுவயதில் இருந்த போது மன்னாரில் மீனுக்கு உப்பு போட்டுக் கருவாடாக்கும் வேலைக்கு எங்களை அனுப்புவார்கள் என்று மூத்தோர் எம்மை மிரட்டுவார்கள். ஆனால் கருவாடு போடுவதை விட மன்னார் களியாட்டப் பூங்கா நகர் அமைக்கப் பொருத்தமான இடம். நாட்டுக்கு டொலரைக் கொண்டு வருவதற்கு இதைப் போல நாங்கள் பல வேலைகளைச் செய்யலாம்." - என்றார் டயானா அம்மையார்.

ஏற்கனவே இரவு பார்களின் மூடும் நேரத்தை நள்ளிரவு வரை நீடிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கோரிச் சர்ச்சையை ஏற்படுத்தியவர்தான் டயானா அம்மையார்.

அவரது பிந்திய பேச்சு நம் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பியைச் சீற்றத்திற்குள் ஆழ்த்தி இருக்கின்றது.

"மன்னார் மாவட்டத்திற்கு எனத் தனித்துவமான கலை,கலாச்சாரப் பாரம்பரிய பெருமைகள் உண்டு. எனினும் மன்னார் மாவட்டம் தொடர்பாக தரக் குறைவாக பேசுவதற்கு இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவிற்கு எவ்வித அருகதையும் இல்லை. அவரது கருத்துக்குக் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்" எனச் சீறியிருக்கின்றார் சாள்ஸ் நிர்மலநாதன்.

"புதிதாக இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டம் தொடர்பாக கோபத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தை ஊடகங்கள் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

"மன்னார் மாவட்டத்தை ஓர் களியாட்ட இடமாகவும், குறிப்பாக தன்னை சிறு வயதில் கருவாடு காய வைப்பதற்கு மன்னாரிற்கு அனுப்ப உள்ளதாகத் தன்னை பயமுறுத்தி வளர்த்ததாகவும், அவர் கூறியுள்ளார்.

"அவரது கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். மன்னார் மாவட்டம் மிகவும் கலை, கலாசார பண்புகள், கடல் வளம், விவசாய வளம் அனைத்தோடும் பொருந்தியதாக அமைந்துள்ளது.

"தற்போது கல்வியில் தலை சிறந்து விளங்கிக் காணப்படுகின்றது. தற்போதைய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த காலங்களை விட இம்முறை உயர்ந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம், மடுத் திருத்தலம் ஆகிய இரு பழைமை வாய்ந்த திருத்தலங்கள் உள்ளன.

"எனவே மன்னார் மாவட்டத்தின் கலை,கலாச்சார பண்புகள் தெரியாமல், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஊடகங்கள் முன் கதைப்பது கண்டிக்கத்தக்க விடயம். இப்படிப்பட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கிய ஜனாதிபதி அதனை பரிசீலிக்க வேண்டும்.

"இந்தப் பெண்மணி சில காலங்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் ஒரு கருத்தை முன்வைத்தார். நாட்டில் கஞ்சா வளர்ப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றார். கொழும்பை இரவு நேர களியாட்ட வலயமாக மாற்ற வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் பேசி இருந்தார்.

"அவருடைய செயல்பாடுகள் தொடர்ச்சியாக இவ்வாறு இருக்கும் போது அவருக்கு இராஜாங்க அமைச்சுப் பொறுப்பு வழங்கியமை குறித்து ஜனாதிபதி மீளப் பரிசீலிக்க வேண்டும்." - என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை சாள்ஸ் - டயானா மோதலும் சுவாரஸியமாகத்தான் இருக்கிறது.

- மின்னல் -

## அரச ஊழியர்களைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்க முன்வந்த ஜனாதிபதி, அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமிப்பதற்கு எவ்வாறு அனுமதியளித்தார் என 'பவ்ரல்' அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளை மகிழ்விப்பதற்கும் அரசியல் அதிகாரத்தை தக்க வைப்பதற்கும் அதிக எண்ணிக்கையிலான அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதால் அதிக செலவுகள் ஏற்படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் தங்களுக்கு உரிய சம்பளத்தை மாத்திரமே ஏற்றுக்கொள்வார்கள் என அரசாங்கத்தின் பிரதம கொறடா தெரிவித்துள்ள போதும் அதனை நிறைவேற்றுவது கடினமான விடயம் என அமைச்சர்கள் பலர் தெரிவித்துள்ளமையை பவ்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர் ஒருவருக்கு 15க்கும் மிகாத தனிப்பட்ட அதிகாரிகள் இருக்கவேண்டும். மற்றும் ஊழியர்களுக்கு 6 வாகனங்களும் ஒவ்வொரு வாகனத்துக்கும் 600 லீற்றர் டீசல், 750 லீற்றர் பெற்றோல் என்பன வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

குறித்த சுற்றறிக்கை மூலம் அமைச்சர் மற்றும் ஊழியர்களின் தொடர்பாடல் செலவை அரசாங்கம் ஏற்கும் என்பதுடன், குறிப்பிட்ட அளவுக்கு அமைச்சர்களின் சிறப்புரிமைகளை மட்டுப்படுத்தியுள்ளதாக பவ்ரல் கோடி காட்டியுள்ளது.

ஊழல் குற்றவாளிகளை அமைச்சரவைக்கு நியமித்ததையும் கண்டித்துள்ள பவ்ரல், அதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் செய்தி குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளது.

பொது மக்கள் பிரதிநிதிகளின் செயற்திறனை அளவிடுவதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்துமாறு அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## களனியவில் சூடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் களனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜெனிவா பிரேரணை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு முன்வைத்துள்ள இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தும் யோசனை இந்த வரைவுத் பிரேரணையில் இடம்பெறவில்லை.

இலங்கையில் நடந்ததாகக் குற்றம் சாட்டப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான எதிர்கால விசாரணைக்குத் தேவையான ஆதாரங்களை சேகரிக்கவும், பாதுகாத்து வைக்கவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ள திறனை நீடிக்கவும் வலுப்படுத்தவும் பிரேரணை நகல் அழைப்பு விடுக்கிறது.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை அவர்களின் எதிர்பார்ப்பைத் திருப்தி செய்யும் புதிய அம்சங்கள் ஏதும் நகல் வரைவில் இல்லலை.

தீவிர இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக் கூறல் இல்லாமை மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உட்பட இலங்கையின் நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படைக் காரணிகள் மற்றும் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் வரைவுப் பிரேரணை வலியுறுத்துகிறது.

சிவில் அரசாங்க செயல்பாடுகளை தொடர்ந்து இராணுவமயமாக்கல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான முக்கிய நிறுவனங்களின் சுதந்திரமற்ற போக்கு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நீண்டகால குறைகள் மற்றும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் முன்னேற்றமின்மை; கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் இறந்தவர்களை நினைவேந்தல் தடை மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை துன்புறுத்துதல் போன்றவை குறித்து பிரேரணை வரைவு கரிசனை செலுத்துகிறது.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த பிரேரணை வரைவு வலியுறுத்துகிறது. அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வதற்கும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான இலங்கையின் கூற்றுக்களை இந்தப் பிரேரணை வரைவு கவனத்தில் கொள்கிறது.

எனினும் பல ஆண்டுகளாக சர்வதேச சட்டத்திற்கு அமைவாக சட்டம் திருத்தப்படும் என்று இலங்கை சர்வதேச சமூகத்திற்கு பல உறுதிமொழிகளை அளித்துள்ளது. இன்றுவரை, போதுமான சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை என்பதையும் பிரேரணை வரைவு சுட்டிக்காட்டுகிறது.

தனிநபர்களை தன்னிச்சையாக கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும், கைதிகளை சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் பிற மோசமான சிகிச்சைக்கு உள்ளாக்குவதற்கும் ஒரு கருவியாக இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகிறது என்று பிரேரணை வரைவு கூறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை இலங்கை எட்டியுள்ளது என்ற அறிவிப்பை பிரேரணை வரைவு வரவேற்றுள்ளது. அத்துடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் பெறுபவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்கள் உட்பட மிகவும் பின்தங்கிய தனி நபர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரேரணை வரைவு வலியுறுத்துகிறது.

அத்துடன், பிரேரணை வரைவில் இறுதிப் பத்தி இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை தொடருமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கோருகிறது.

## 'கபுடு காக்கா' வை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தால், சம்பவ இடத்திலேயே அபராதம் விதிக்கலாம் என்றும் சட்டத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என கோட்டை பொலிஸாரை எச்சரித்த நீதிவான், சட்டத்தரணி துஷ்மந்த வீரரத்னவை விடுதலை செய்துள்ளார்.

மக்கள் போராட்டத்தின் போது உயிர் நீத்த மற்றும் காயமடைந்த போராட்டக்காரர்களை நினைவுகூரும் வகையில், காலி முகத்திடலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வின் போது, தேவையில்லாமல் ஒலி எழுப்பியதாக குற்றம் சுமத்தி சட்டத்தரணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# பளை பிரதேசத்தில் உள்ள காணிகள் இராணுவத்துக்கு வழங்கப்படவில்லை

## அடித்துக்கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்



பளை பிரதேசத்தில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவிற்கு சொந்தமான காணிகள் இராணுவத்துக்கு வழங்கப்படுவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மக்களிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டு குறுகிய அரசியல் நோக்கத்துக்காகச் செயற்படும் குழுக்களின் இவ்வாறான அறிக்கைகளை ஊடகங்களில் வெளியிடும் போது ஊடக நிறுவனங்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பளை பச்சிமலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளை கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் காணியற்ற மக்களுக்கும் காணாமற்போனவர்களின் உறவுகள் மற்றும் இந்தப் பிரதேச மக்களுக்கும் பகிர்ந்தளிக்குமாறு அரசாங்கத்துக்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ முகாம்களை அமைப்பதற்கு நிறைய காணிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நங்கூரமிடப்பட்டுள்ள எரிபொருள் கப்பல்களுக்கு அரசாங்கத்தால் பணம் செலுத்த முடியவில்லை!

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவிப்பு

இலங்கைக் கடலில் நங்கூரமிடப்பட்டுள்ள எரிபொருள் கப்பல்களுக்கு டொலர் தட்டுப்பாடு காரணமாக பணம் செலுத்த முடியவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மூன்று வாரங்களுக்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் ஒரு கச்சா எண்ணெய் கப்பல் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் குறித்த கப்பலுக்கான பணத்தை இலங்கை இன்னும் செலுத்தவில்லை என அந்தக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் டீசல் ஏற்றிச் செல்லும் இரண்டு கப்பல்கள் ஒரு வாரத்துக்கும் மேலாக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

கப்பல்களுக்கு பணம் செலுத்துவதற்குத் தேவையான டொலர்களை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர், சுகாதார ஊழியர்களுக்கு ஐந்தாண்டு விடுமுறை பொருந்தாது!

## அதிகாரி ஒருவர் கருத்து

அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் சம்பளமற்ற விடுமுறை வழங்கும் அரசாங்கத்தின் சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் போன்ற பிரிவுகளுக்கு பொருந்தாது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே, இந்த நீண்ட கால விடுமுறைக்கான சுற்றறிக்கையை அரசாங்கம் பல்வேறு நிறுவனங்களின் மேலதிகமான ஊழியர்களை விடுவிப்பதற்காகவே அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பிரிவு ஊழியர்களுக்கு இது பொருந்தாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாங்கள் தற்போது இந்த சுற்றறிக்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசின் விநோதக் கொள்கை!

நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் ஒரு நடவடிக்கையாக அரச ஊழியர்கள் அதிகமானோரை ஒரேயடியாகச் சேவையிலிருந்து விலக்கி அரச ஊழியர் எண்ணிக்கையை குறைக்கின்றது அரசு.

முன்னைய அரசு வினோதமான – விபரீதமான – ஒரு கொள்கை முடிவைத் திடீரென அறிவித்துச் செயல்படுத்தியது. அதுவரை காலமும் 60 வயது என்ற அரச ஊழியர்களின் ஒய்வு கால எல்லையை அது திடுதிப்பென 65 ஆக உயர்த்தியது.

அதனால் 60 வயதை எட்டும் நிலையில் இருந்த பலரின் ஓய்வு காலம் தள்ளிப் போனது. ஓய்வு பெறும் வயதைத் திடீரென அதிகரித்தமையால் கடந்த இரண்டு ஆண்டுகளாக, எந்த அரசு ஊழியரும் வயது மூப்பினால் ஓய்வு பெற முடியவில்லை. அதனால் அரச ஊழியர் எண்ணிக்கையில் வழமையான குறைப்பு இல்லாமல் போய்விட்டது.

அதேசமயம் அரச பல்கலைக்கழகங்களில் சித்தி பெறும் சகல பட்டதாரிகளுக்கும் அரசு வேலை வழங்கப்பட்டாக வேண்டும் என்ற எழுதப்படாத – விபரீதமான – வினோதமான – சட்டம் அல்லது வழக்காறு காரணமாக, பட்டதாரிகளான ஆண்டுகளின் அடிப்படையில் அரச பட்டதாரிகள் அனைவரும் கட்டம் கட்டமாக அரச சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டனர்.

அரச சேவையில் தேவைகள், வெற்றிடங்கள், பதவி நிலைகள் பார்த்து இந்தப் பட்டதாரிகள் அரசு சேவைக்குள் உள்ளீர்க்கப்படவில்லை. மாறாக, அவர்கள் அனைவரும் அரச சேவையில் கேட்டுக் கேள்வி இன்றி – தேவை வரையறைகள் கவனிக்கப்படாமல் – உள்வாங்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய அரசு பதவி நிலைகள் தேடப்பட்டன. அதற்காக புதிய சேவைத் தரங்கள், பதவி நிலைகள் உருவாக்கப்பட்டன

இப்படி அரசு சேவை அர்த்தமின்றி ஊதிப் பெருத்து, அரச நிதிக் கணக்குகளை ஏப்பமிட்டு, பெரும் பாரமானதும் கூட, நாட்டின் பொருளாதாரம் இவ்வாறு திடீரென சரிந்து செயலிழந்தமைக்கு ஒரு முக்கிய காரணமா ஆகும்.

அரச சேவையில் இருந்தோரின் ஓய்வு வயது திடீரென உயர்த்தப்பட்டமையால் கடந்த இரண்டு ஆண்டுகளில் யாரும் வயது மூப்பினால் ஓய்வுக்குச் செல்லாத சூழ்நிலையில், இப்போது அரச செலவினத்தைக் குறைத்து, பொருளாதார கட்டுமட்டுகளை ஏற்படுத்துவதற்காக, மீண்டும் ஓய்வு பெறும் வயது 60 ஆக குறைக்கப்படுகிறது.

ஏற்கனவே 60 வயதை தாண்டிய பின்னரும், ஓய்வு பெறும் வயது 65 என சில வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட காரணத்தினால் தொடர்ந்து சேவையில் இருந்த அனைவரையும் வரும் டிசம்பர் 31 உடன் ஒரேடியாக ஓய்வு பெறும்படி அரசு அறிவித்துள்ளது.

அதனால் அந்தத் திகதியான டிசம்பர் 31 அன்று அரச ஊழியர்கள் 25,000 பேர் ஒன்றாக ஓய்வுக்குப் போகப் போகிறார்கள்

நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரச ஊழியர்கள் இப்படி ஒரே சமயத்தில் வெட்டி குறைக்கப்படுகின்றார்கள். ஆனால் மறுபுறத்தில், நாட்டின் செலவுத் தானத்துக்குப் பெரும் மாற்றத்தை – அதிகரிப்பை – ஏற்படுத்தக்கூடிய அமைச்சர்கள் எண்ணிக்கை மட்டும் எண்ணுக் கணக்கின்றி அதிகரிக்கப்படுகின்றது.

இதுதான் இந்த நாட்டின் விநோதமான கொள்கை போக்கு.

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம்; ஏமாற்றிவிட்டார் ஜனாதிபதி ரணில்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேதனை




தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது தொடர்பாக ஜனாதிபதியால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதியாலும் ஏமாற்றப்பட்டு இருக்கிறோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தேசிய கைதிகள் தினத்தையோட்டி 417 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இதில் ஒரு தமிழரசியல் கைதியும் விடுவிக்கப்படவில்லை. 46 தமிழரசியல் கைதிகள் வீட்டுக்கு திரும்புவார்கள் என எதிர்பாத்து காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சி இருந்தது.

கடந்த மாதம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அந்த அடிப்படையில் தமிழரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் அதுவும் இடம்பெறவில்லை தொடர்ச்சியாக ஏமாற்றத்தையே சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது தொடர்பாக ஜனாதிபதியால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்குறுதியாலும் ஏமாற்றப்பட்டு இருக்கிறோம்.

இந்த விடயம் சம்பந்தமாக அனைத்து தரப்பினரும், தமிழ் பேசும் மக்களுடைய பிரதிநிதிகள் இந்த விடயத்தில் உடனடியாகச் செயல்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களில் ஆறு பேரின் உடல்நிலை மோசமடைந்து வெலிக்கடை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டோ அல்லது ஏதாவது பொறிமுறையை பயன்படுத்தி தீர்வை பெற்றுக் கொடுக்க துறைசார்ந்தவர்கள் விரைந்து செயல்பட வேண்டும். – என்றார்.

# உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய திட்டம் தேவை

## ஜனாதிபதி ரணில் கருத்து



இலங்கையில் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையை ஸ்தாபிக்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை நவீனமயமாக்குவதன் ஊடாக உற்பத்தி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் விவசாயத்தை அந்நிய செலாவணி ஈட்டும் துறையாக மாற்ற வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகளாவிய உணவுப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் கூட்டான முறையில் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்துடன் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

# கடன் பிரச்சினை மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கு உள்ளது!

## சர்வதேச நாணய நிதியத் தலைவர் கருத்து




இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கும் ஏனைய பெரும் கடன் வழங்கும் நாடுகளுக்கும் உள்ளது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வளர்ந்து வரும் சந்தையில் 25 விகிதமான நாடுகளும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 விகிதமான நாடுகள் கடன் நெருக்கடியில் இருக்கின்றன என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா தெரித்துள்ளார்.

குறிப்பாக, இலங்கைக்கு பொதுக் கடனாளிகள் விரைவாக பேச்சு மேற்கொள்வார்கள் என்றும் தனியார் கடன் வழங்குநர்கள் பேச்சுக்கு வருவார்கள் என தான் நம்புகிறார் எனவும் கிறிஸ்டினா ஜோர்ஜீவா கூறியுள்ளார்.

இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் லசார்ட் நிதி ஆலோசனைக்குழுபேச்சுகளைஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# ஜனாதிபதி ரணிலின் கடிதம் நஸீர்மூலமாக ஐக்கிய அரபு இராச்சியத்திடம் கையளிப்பு!



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ ஐக்கிய அரபு இராச்சியத்தின் அமீருக்கு எழுதியனுப்பிய விடே கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விடே தூதுவராக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட், அந்தக் கடிதத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான மாட்சிமைமிகு அப்துல்பின் யெய்த் அல் நஹ்யானிடம் கையளித்துள்ளார்.

இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அபுதாபியில் இடம்பெற்ற சந்திப்பில் பல தரப்பு விடயங்கள் தொடர்பாக அமைச்சர் நஸீர் அஹமட்டும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதார மேம்பாடுகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்தும் விளக்கிய அமைச்சர நஸீர் அஹமட், அதற்கான தீர்வுகள் பற்றியும் எடுத்துரைத்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவிகளைப் பெறுவது தொடர்பில் அக்கறை செலுத்துமாறும் வேண்டிக் கொண்டார்.

மேலும், பிராந்திய மற்றும் சர்வதேசத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்புக்களுடன் பல்துறைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறான விடயங்களுக்கு ஒத்துழைப்பதில் இலங்கைக்குள்ள ஆர்வங்களையும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் மஹாதேவி பீரிஸம் கலந்து கொண்டார்.

# ரணிலுக்கு உலகமே அஞ்ச வேண்டுமாம்!

## கூறுகிறார் வஜிர அபேவர்தன



சர்வதேச அமைப்புகளின் நலன்களைத் தோற்கடிக்க, இலங்கையர்கள் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று (புதன்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துதெரிவித்த அவர், சர்வதேசசமூகம் எப்பொழுதும் எமது நாட்டை பலவீனமான நிலைக்குத் தள்ளவே முயற்சிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அதிர்ஷ்டவசமாக உலகையே எதிர்த்துப் போராடக் கூடிய தலைவர் ஜனாதிபதியாகிவிட்டார் என்றும் அவரைக்கண்டு உலக நாடுகள் அஞ்ச வேண்டும் என்றும் வஜிர அபேவர்தன கூறியுள்ளார்.

எனவே நாட்டு மக்கள் அரசியல் கட்சித் தலைவர்களை ஒன்றிணைத்து தேசிய வேலைத்திட்டத்தில் உடன்படுமாறு தொடர்ந்தும் வலியுறுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அனைவரும் ஒன்றிணைந்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறியமை போல் 2048 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை உலகின் தலைசிறந்த நிலைக்கு உயர்த்த முடியும் என வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# என் இரத்தத்தில்கூடவே விளையாட்டும் உள்ளது!

## நாமல் பெருமிதம்

இலங்கை கிரிக்கெட் அணி ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ள நிலையில், இது வெற்றிகளின் ஆரம்பம் என்றும் இன்னும் பல வெற்றிகள் வரவுள்ளன என்றும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



விளையாட்டுத் துறை அமைச்சர் யார் என்பது முக்கியமல்ல என்றும் அமைப்பில் தலையிடாவிட்டால் வெற்றிகள் அதிகம் என்றும் அவர் கூறினார்.

புதிய அணித் தலைவரை கொண்டு வந்த பின்னர், இலங்கை அணி போட்டிகளில் தோல்வியை சந்திக்கும்போது தான் விமர்சித்தார் எனவும் முன்னாள் அமைச்சர் கூறினார்.

'விளையாட்டு என் இரத்தத்தில் உள்ளது, நான் விளையாட்டை மீண்டும் கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தேன். என்னை உருவாக்க அல்ல' என்றும் அவர் தெரிவித்தார்.

அமைப்பில் யாராவது தலையிடும்போது வீரர்கள் விளையாடுவது எவ்வளவு கடினம் என்பது எனக்குத் தெரியும் என்றும் அவர் கூறினார்.

# 2 ஆம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இரங்கல்!



பிரித்தானியாவின் மகாராணி 2 ஆம் எலிசபெத்தின் மறைவுக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இரங்கல் தெரிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, உத்தேச தேசிய சபையை எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதித்ததன் பின்னர் அதனை ஏற்றுக்கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

# எரிசக்தித் துறையில் முதலீடு செய்ய முன்வந்துள்ள ஆஸ்திரேலிய முதலீட்டாளர்களுடன் ஜனாதிபதி பேச்சு!

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய முன்வந்துள்ள ஆஸ்திரேலிய முதலீட்டாளர்களுடனான ஆரம்ப கலந்துரையாடலொன்று நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடு செய்வது தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் ஆராயும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் உள்ளிட்ட முதலீட்டாளர்கள் கலந்துகொண்டனர். தற்போதைய மின்சார நெருக்கடிக்குத் தீர்வாகவும் தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யவும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்கவும் இலங்கை அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்துசெய்ய கோரி மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்!



மன்னார், செப். 15

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழி போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் 5 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று (புதன்கிழமை) மன்னாரில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும், சர்வஜனநீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசாரநடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன் தலைமையில் மன்னார் நகர பஸ் தரிப்பிடத்தில் இடம் பெற்றது.

இதன் போது மக்கள்,அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையொப்பமிட்டு தமது ஆதரவை வழங்கினர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழருக்கு நிரந்தரத் தீர்வு ரணில் அரசால் கிடைக்காது!

## ஐ.நா.கவனவீர்ப்பு போராட்டத்தில் மட்டு.மேயர் சரவணபவன் காட்டம்




(வி.ரி.சகாதேவராஜா)

மொட்டு கட்சியின் பின்னால் இருக்கும் ரணிலின் அரசாங்கம் தமிழ் மக்களுக்காக நியாயமான நீதியான நிரந்தரமான தீர்வை தரும் என்று ஒருபோதும் எதிர் பார்க்க முடியாது .இதனை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும்.

– இவ்வாறு ஐ.நா. கவன ஈர்ப்பு போராட்டத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

அனைத்து உலக மனித உரிமை ஸ்தாபனம் மற் றும் இனப் படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள் கூட் டமைப்பு இணைந்து ஐ.நா. கூட்டத்தொடர் நடக்கும் மண் டபத்துக்கு முன்பாக முருகதாஸ் தலைமையில் கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது .

அந்தப் போராட்டத்தில் இலங்கையில் இருந்து சென்ற பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

அங்கு சரவணபவன் மேலும் உரையாற்றுகை யில் –

இலங்கையில் கடந்த காலங்களில் தமிழர்களின் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான இன அழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இது விடயத்தில் காலம் தாழ்த்தாமல் குறுகிய கால இடைவெளிக்குள் இதற்குத் தீர்வு தரவேண்டும். திட்டமிட்ட இனப்படுகொலைக்கு நியாயமான தீர்வு வேண்டும் .இதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள அனைத்து நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழர்களின் இனப்பரம்பலைக் கூறு போட்டு மாற்றி அமைக்க, மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பிரதேச ரீதியாக அழிவு நடத்தி மாற்றுவதற்காகவே சிங்கள குடி யேற்றத் திட்டங்களை உருவாக்கினார்கள்.

1966 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா குடியேற்றத் திட்டம். அதேபோன்று திரு கோணமலை மாவட்டத்தில் சேருவில குடியேற்ற திட்டம்.

எப்படியாகவாவது கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சி யாக இந்த சிங்கள பேரினவாதம் குடியேற்றத் திட்டங் களை ஏற்படுத்தி வருகின்றது. அதேபோன்று சத்துருக் கொண்டானில் 256 பேரும் வந்தாறுமூலையில் 156 பேரும் கொத்தணி முறையில் படுகொலை செய்யப் பட்டார்கள்.

இப்படிதிருமலைவரை அம்பாறைமாவட்டங்களிலும் கொத்தணி கொத்தணியாகத் தமிழ் மக்கள் மிலேச்சத் தனமாகக் கொல்லப்பட்டார்கள்.

இறுதியாக முள்ளிவாய்க்கால் பேரவலம். லட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால் 1950 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாதம் இந்த சிங்கள ஆக்கிரமிப்பை ஒட்டுமொத்தமாக சிறு பான்மைக்கு எதிராக அந்த நடவடிக்கை முதல் முத லிலேயே அரங்கேறியது.

வடக்கு கிழக்கில் பல ஆயிரம் படுகொலைகள் இடம் பெற்றன. யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. முல் லைத்தீவு திருகோணமலை மாவட்ட எல்லை கிராமங்க ளில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் மண் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

2009 இல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டார்கள். இதுவரைக்கும் அதற்கு நீதி இல்லை. அதற்கு நீதி வேண்டும் என்று தங்களது பிள்ளைகளை திருப்பித் தர வேண்டும் என்று வடபுலத்திலே தாய்மார்கள் 2000 நாள்களாகப் போராடி வருகிறார்கள். இதுவரைக்கும் எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. சிங்கள பேரின வாதம் எமக்கு தீர்வு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை. சர்வதேசம் ஒன்று தான் எமக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

பேச்சுகள் அன்றும் இன்றும் கிழித்து எறிந்து தடுத்து அடக்கி ஒதுக்கியதே வரலாறு.

உலகில் தமிழர் தேசத்தை நியாயமான தேசமாக மிளிரச் செய்ய வேண்டும். நீதிக்கான வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபடுவோம். – என்றார்.

## போதைப் பொருள்களுடன் யாழில் நால்வர் கைதாகினர்!

யாழ்ப்பாணம் மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த நான்கு பேரை 61 கிராம் போதைப்பொருளுடன் நேற்று (புதன் கிழமை) அதிகாலை 2 மணியளவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் கைப்பற்றப்பட்ட போதை பொருளும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் யாழ்ப்பாணத் தையும் ஒருவர் கொழும்பையும் சேர்ந்தவரெனத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் போதைப்பொருள் வியா பாரிகள் என சந்தேகம் வெளியிட்ட பொலிஸார், விசா ரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை நீதிமன் றத்தில் முற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ள னர்.

## அப்பியாசப் புத்தக விலையும் அதிகரிப்பு

*40 பக்கங்களைக் கொண்ட அப்பியாசப் புத்தகம் ஒன்றின் விலை 65 ரூபாவில் இருந்து 180 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*120 ஆக இருந்த 120 பக்க அப்பியாசப் புத்தகம் ஒன்றின் விலை 120 ரூபாவில் இருந்து 225 ஆகவும் 80 பக்க புத்தகம் 75 ரூபா யில் இருந்து 100 ரூபாவாகவும் அதிகரித்துள் ளது.*

*இதேவேளை 40 பக்க சி.ஆர். புத்தகத் தின் புதிய விலை 150 ரூபாவில் இருந்து 290 ரூபாவாகவும் 40 பக்கங்கள் கொண்ட வரைபு புத்தகம் 230 ரூபாவாகவும் அதிகரித் துள்ளது.*

## சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தப்படுவதை நிறுத்துக!






### மன்னாரில் போராட்டம்

மன்னார், செப். 15

வடக்கு – கிழக்கில் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் துன்புறுத்துவதை நிறுத்தக் கோரியும், மேற்படி சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கு ஒருங்கி ணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் ஏற் பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு போராட்டம் நேற்று (புதன் கிழமை) காலை மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக் கான நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் நேற்று (புதன் கிழமை) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் சுற்றுவட்ட பகுதியில் இந்த எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது போராட்டத்தில் சமூக செயற்பாட் டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவுகள், காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாச கங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர்களை துன் புறுத்துவதை நிறுத்து, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், இலங்கை அரசே பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்கு, எமது நிலம் எமக்கு வேண்டும், கருத்துச் சுதந்திரம் எமது உரிமை உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சர்வதேச பிரசாரங்களும் புத்திமதிகளும்

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 123

மதியுரைஞர் பாலசிங்கமும் மனைவி அடேலும் கருணாநிதியையும் முரசொலி மாறனையும் சந்தித்தபோது அவர்கள் ஆயுதங்களைக் கையளித்து விடுதலைப் புலிகள் அரசியல் தீர்வு நோக்கிய பாதையில் புதுடெல்லியுடன் இணைந்துதான் பயணிக்க வேண்டும் எனவும், தங்களது அரசு மாநிலமாக, சுதந்திரமாக இயங்கினாலும், இருக்கின்ற – காலத்துக்கு காலம் வருகின்ற – வரைமுறைகள்,


பாலசிங்கமும் மனைவி அடேலும்

அவற்றில் கடைபிடிக்கப்பட வேண்டிய தேவைகள், அவற்றின் அணுகுமுறைகள் ஆகியன கருதியே செயற்பட முடியும் எனவும் விளங்கப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகள் இந்தியப் படைகளை எதிர்த்து நின்றாலும், ராஜிவ் காந்தி முன்னர் ஒப்புக்கொண்டபடி ஒப்புக்கான ஆயுதக் கையளிப்பு நடந்து விட்டால், அத்தோடு விட்டு, விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மேலும் பாவிக்க மாட்டார்கள் என்று பேசிப் பார்க்கலாம் என்பதற்கு அபிப்பிராயம் கூறப்பட்டன.

இப்படியான யுத்தத்தால் கணிசமான போராளிகளை மட்டுமல்லர், எல்லாவற்றையும் இழக்கலாம், ஆனால் புத்திசாதுரியமான நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று புத்திமதிகள் தரப்பட்ட போது, பாலசிங்கம் விடுதலை புலிகள் அவற்றுக்கு ஒத்துவர மாட்டார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்தார்.

அவர்கள் இலட்சியவாதிகளாகத் தங்களது இலட்சியம் நிறைவேறும் வரை


கருணாநிதி

– கடைசி போராளி இருக்கும் வரை – போராடியே மடிவார்கள், மரணிப்போம் என்று அவர்கள் அஞ்சவில்லை, இடைக்கால ஒப்பந்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் அதிகாரம் நிலைப்படுத்தப்படும் வரை அவர்கள் ஆயுதங்களைக் கையளிப்பதை ஏற்கப் போவதில்லை, அதே சமயம் மற்ற குழுக்களை அவர்கள் அனுமதிக்கவும் மாட்டார்கள், அப்படி இயங்க முனைவோர்கள் அழிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் நிர்வாகமே தமிழ் பகுதிகளில் நடக்க வேண்டும் என்ற தெளிவான திட்டங்களில் அவர்கள் இருக்கின்றமையும் சுட்டிக் காட்டப்பட்டது.

முரசொலி மாறன் பின்னர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து நிலைமைகளை ஒட்டி பரிந்து பேசிய போதும் – நிலைமையை மீளாய்வு செய்யுமாறு கேட்டாலும் – ராஜீவ் அதற்கு இணங்கவில்லை. மறுத்து, விடுதலைப் புலிகள் எல்லாப் பகுதியினரோடும் இணைந்து, ஜனநாயகப் பாதையில் தீர்வை நோக்கிப் போக வேண்டும், அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் தமிழ் மக்களது பாதுகாப்புக்காகவன்றி தங்களை மற்றவர்களுக்கு எதிராக பலப்படுத்திக் கொள்வதற்கு அல்ல, ஆனால் அதற்கே அவர்கள் பாவிக்கிறார்கள், ஆயுத கலாச்சாரம் மறைந்து



முரசொலி மாறன்

எல்லாப் பகுதியினரும் தங்களது பங்களிப்பைச் செய்யும் வாய்ப்பும் சந்தர்ப்பங்களும் அமுலாக்கப்பட வேண்டிய தேவைகள் உண்டு என்பதே ராஜிவின் பதிலாக இருந்தது.

தாங்கள் பேச்சுவார்த்தைகளுக்கு வரத் தயார் எனப் புலிகள் அறிவித்த அதேசமயம், அவர்களது ஆதரவாளர்கள் புலம்பெயரில் தங்களது இலட்சியமான தமிழீழம் அமையும் வரை ஆயுதப் போராட்டம் தொடரும் என்றும், விடுதலைப் புலிகளும் பிரபாகரனும்தான் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்கள் என்றும், இந்தியா பலவந்தமாக ஏற்படுத்திய ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முற்படுவதால் அது தமிழ் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்றும், அதற்கு சர்வதேசம் அழுத்தங்கள் தர வேண்டும் என்றும் பிரச்சாரங்கள் செய்தனர்.


இந்தப் பிரச்சாரங்கள் ஐ.நாவுக்குக் கூட மகஜர்களாகத் தரப்பட்டு ஆராயுமாறு கோரிக்கைகள் எழுந்தன.

சிங்களத் தரப்புக்கள் இந்தியாவுக்கு


பிரபாகரன்

எதிரான, நேரடியான ஆர்ப்பாட்டங்களை நிறுத்தி, அவற்றை ஜே.ஆரின் அரசுக்கு அழுத்தமாக நடத்திய போது, விடுதலைப் புலிகளோ அவர்களுடன் (இந்தியாவுடன்) தொடர்ந்து மோதல்களில் ஈடுபட்டு, இந்தியாதான் அவர்களது இலட்சியத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது, இந்த வாழைக்குலையை வழியில் இறக்கி விட்டால்தான் வேகமாகப் பயணித்து, சேரும் இடத்தைச் சேர்ந்து விடலாம் என்று சைக்கிள் பெடல்களை பலத்துடன் மிதித்தார்கள்.

இந்திய வல்லரசின் பிராந்திய அதிகாரத்தை மீறி, அதற்கு எதிராக, இந்தியக் கடற்பரப்பில் இருக்கும் எந்த நாடோ, சர்வதேசமோ, விடுதலை புலிகளின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவை


ராஜிவ் காந்தி

வெளிப்படுத்தவில்லை. இது இன்றும் கூட இல்லை.

இந்தக் கோரிக்கைக்கு சர்வதேசங்களில் இருந்து ஆதரவு திட்டப் போவதில்லை என்பதை அறிந்து கொண்டு, யதார்த்தமாக அடைய முடியாத ஒன்றிற்காக, தமிழ் மக்களைக் காவு கொடுக்கிறார்கள் என்பதே விடுதலை புலிகளுக்கு எதிராக இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளால் சர்வதேசங்களுக்கும் முன் வைக்கப்பட்டது.

தாங்கள் தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் தனித்து அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதற்காகவே ஆயுதங்களைக் களைய முன்வராமல், அவற்றை வைத்துக்கொண்டு, ஜனநாயகமற்ற சூழலில், சர்வாதிகாரப் போக்கை நிலை நிறுத்த, ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த விடாது குழப்பங்கள் விளைவிக்கிறார்கள், அவற்றுக்காக பாரிய மனித உரிமை மீறல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என பல அரசு சார்பற்ற மனித உரிமைகள் மன்றுகள், அமைப்புகள் கூட பொது வெளிகளில் அபிப்பிராயங்கள் தந்தன.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், அது முக்கியம் என்றும், சர்வதேசங்கள் ஆதங்கப்பட்டாலும், விடுதலை புலிகளை ஒட்டிய அவர்களது அணுகுமுறைகளால் கரிசனைகள் வளர்ந்தன.

மதியுரைஞரும் மனைவியும் வெளிநாட்டில் இருந்த போது விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி, பெரும்பாலும் மற்ற பகுதிகளுக்கு பரந்து இருந்தார்கள். அப்படி இருந்தால் அவர்கள் தாக்குப் பிடிக்க மாட்டார்கள் என்ற கணக்கு இந்திய மட்டத்தில் இருந்தது. அத்தோடு அவர்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட பிரச்சாரங்களுக்கு சர்வதேசத்தில் மந்தமான வரவேற்பே கிடைத்ததால் இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீர்மானங்களை தளர்த்துவதற்கு விரும்பவில்லை.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் இந்தியா வெளியிட்டுள்ள கவலை...!



இனப் பிரச்னைக்கு உரிய வகையில் அரசியல் தீர்வை வழுங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டவில்லை என ஐ.நா சபையில் இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 51 வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வரும் நிலையிலேயே, இந்தியா இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப் பிரச்சினைக்கு உரிய வகையில் அரசியல் தீர்வை வழுங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை எட்டவில்லை என இந்தியா அந்த கூட்டத்தொடரில் தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு உள்ளடங்கலாக அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் எனவும் இந்தியா கூறுகின்றது.

இதன்படி, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப்பிரச்னைக்கு உரியவாறான அரசியல் தீர்வை வழுங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் இந்தியா சார்பில் உரையாற்றிய பிரதிநிதி கரிசனத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் சுயகௌரவம் ஆகியவற்றை உறுதிசெய்யக் கூடியவாறான அரசியல் தீர்வை வழுங்குவதே இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வருகிறது என குறிப்பிட்ட அவர், தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியானது கடன்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் பொருளாதாரத்தின் மட்டுப்பாடுகள் மற்றும் அதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் மீது ஏற்படக் கூடிய தாக்கங்கள் என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு உள்ளடங்கலாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாகாண சபைத் தேர்தல்கள் விரைவாக நடாத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்ட இந்தியப் பிரதிநிதி, அதன்மூலம் அனைத்து இலங்கையர்களாலும் சுபீட்சமான எதிர்காலத்தை முன்னிறுத்திய தமது அபிலாகைளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்றும், எனவே இவ்விடயத்தில் இலங்கை உடனடியானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### ஆர். சிவராஜா

இந்தியாவின் இந்த கரிசனமானது, ஒரு கானல் நீர் கரிசனம் என இலங்கையை சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் ஆர். சிவராஜா தெரிவித்தார்.

தமிழர்களுக்கு குறைந்தபட்ச தீர்வு இதுவென இந்தியா கருதிய போதிலும், உண்மையில் தமிழர்களுக்கான தீர்வு இது கிடையாது என அவர் கூறுகின்றார்.

“வருடா வருடம் இதே விடயத்தையே இந்தியா கூறுகின்றது. தமிழர்களுக்கு குறைந்த பட்ச தீர்வு இதுவென இந்தியா கருதுகின்றது. ஆனால் உண்மையில் அது தீர்வு அல்ல. மாகாண சபை இவ்வளவு காலம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலே இல்லை. மாகாண சபை இயங்கவில்லை. இப்படியான சூழ்நிலையிலும், தமிழ் மக்கள் முன்னர் போன்றேதான் வாழ்கின்றார்கள். மாகாண சபை ஒத்தி வைத்தமையினால், தமிழர்களுக்கு பாதிப்பு வரவில்லை. அப்படியே மூடி மறைக்கும் வேலையைத்தான் அரசாங்கம் செய்யும். கோட்டாபய ராஜபக்ஷ இருக்கும் போது, மாகாண சபைத் தேர்தல் தேவையில்லை எனச் சொல்லப்பட்டது. அவர் அதற்கு பதில் சொல்லவில்லை. அவர்கள் எடுத்த நிலைப்பாட்டை தான் ஜெனீவாவில் ரணில் இன்று அறிவித்திருக்கின்றார். அதனால், பெரிய மாற்றங்கள் வராது. ரணில் புதிதாக ஒன்றும் செய்ய மாட்டார். பொருளாதார ஸ்திரதன்மை, அரசியல் ஸ்திரதன்மை இல்லாமல், அவரால் செய்ய முடியாது என ஆர்.சிவராஜா குறிப்பிடுகின்றார்.

தமிழர்களுக்கான தீர்வு என்ற விடயமானது, ஓர் இழுத்தடிப்பு வேலையாகவே காணப்படுகின்றது எனவும் அவர் கூறுகின்றார்.

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புகளை சந்தித்துள்ள இந்த தருணத்தில், இந்தியா தொடர்ந்தும் பாரிய உதவிகளை வழுங்கி வருகின்ற இந்த பின்னணியிலேயே, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியா கரிசனை வெளியிடுகின்றமை, மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை கொண்டு வருமா? என மூத்த பத்திரிகையாளர் ஆர். சிவராஜாவிடம் வினவினோம்.

“மாற்றத்தை ஏற்படுத்தவே படுத்தாது. தமிழர் பிரச்சினை குறித்து இந்தியா பேசுகின்ற போதிலும், இந்தியாவிற்கு பொருளாதார ரீதியில் அதனூடாக எந்தவித நன்மையும் இல்லை. அதுவொரு நிலைப்பாடு. வழமை போல் இந்தியாவின் ஓர் அறிவிப்பு. அவ்வளவுதான் என அவர் கூறுகிறார்.

### ராமு மணிவண்ணன்

சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ராமு மணிவண்ணன் இதுதொடர்பாக பி.பி.சி. தமிழிடம் பேசுகையில், ராஜதந்திர அழுத்தம் காரணமாகத்தான் இந்திய பிரதிநிதி இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் தெரிவித்திருக்க வேண்டும். உண்மையில் இலங்கை தமிழர்கள் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என இந்தியா நினைத்திருந்தால் அதனை எப்போதோ கொண்டு வந்திருக்கலாம். அப்படி பல வாய்ப்புகள் இருந்தும் அதனை இந்தியா செய்யவில்லை. என்றார்.

இப்போது இலங்கை தன் கட்டுப்பாட்டை மீறியோ அல்லது தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதால் இந்தியா ஓர் அழுத்தத்தை விளைவிக்க இவ்வாறு கூறியிருக்கலாம். இலங்கை மீதான பல குற்றச்சாட்டுகளை கடந்து அந்த நாட்டுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வந்த இந்தியா, இவ்வாறு கூறுவது மிகப் பெரிய அளவில் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

2009இல் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்ட அனைத்து தீர்மானங்களிலும் இலங்கைக்கு ஆதரவாகத்தான் இந்தியா செயல்பட்டு வருகிறது. இலங்கைக்கு ராஜதந்திர ரீதியாக நெருக்கடியான நிலையை இந்தியா கொடுக்கக் கூடும் என்பதைவிட, அப்படி நெருக்கடியை கொடுக்கும் நாடு இந்தியா அல்ல. எங்களால் அழுத்தம் தர முடியும் என்று காண்பிக்கக்கூடிய நாடுதான் இந்தியாவே தவிர, உண்மையில் அத்தகைய அழுத்தத்தை இந்தியாவால் ஏற்படுத்த முடியாது. இலங்கைக்கு ராஜதந்திர ரீதியாக ஒரு செய்கையை காண்பிக்கிறார்கள், அவ்வளவுதான். இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது மற்ற நாடுகளைவிட இந்தியாதான் அதிகமாக உதவி செய்தது. அப்படி இருக்கையில் எப்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியா இலங்கைக்கு எதிராக செயல்பட முடியும்? என்றார் ராமு மணிவண்ணன்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கையில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், இலங்கையை பொறுத்தவரை இந்தியாவின் ராஜதந்திரம் என்பது வட இந்திய அரசியல்தான். இதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை. இந்தியா இலங்கைக்கு நட்பு நாடு. ஆனால், தமிழகமோ அல்லது தென்னிந்திய அரசியலில் இருந்து பார்க்கும்போது அது உண்மை கிடையாது. இலங்கை ஏறக்குறைய முழுமையாக சீனாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு செல்லும் போது, இந்தியப் பெருங்கடலில் புவிசார் மாற்றங்கள் நிகழும்போது, இந்திய அரசாங்கத்தின் பார்வையில் ஒரு மாற்றத்தை அவதானிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அதனை ஒரு முழுமையான கட்டாயமாக இந்தியா எதிர்பார்க்கவில்லை. ராஜதந்திர அரசியலில் இந்தியாவைவிட பலமடங்கு முன்னோடி நாடாக இலங்கை இருக்கிறது. தேவைப்படும்போது இந்தியாவை புறக்கணிப்பதும் மற்ற தருணங்களில் மிக மிக நெருக்கமாக இருப்பதும் இலங்கைக்கு கடினமான ஒன்று அல்ல என அவர் தெரிவித்தார்.

(நன்றி: பி.பி.சி. தமிழ்)

காலைக்கதிர் Kalaikkathir

## சீனாவுக்கு எமது கடல் வளத்தை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளத்தை கொடுப்பதாக இருந்தால் அதற்கு எதிராக நாங்கள் வடக்கு கடற்றொழில் சமூகமாக போராடுவோம் என்றார்.

வடக்கு மாகாணத்தில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நடந்த கலந்துரையாடலுக்கு பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடமாகாணத்தில் முதலீடு என்ற போர்வையில் கடலட்டை பண்ணை, நீர் வேளாண்மை திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. குறிப்பாக மன்னார், பூநகரி, யாழ் மாவட்ட பிரதேசங்களில் இந்த திட்டங்கள் முதலீடு என்ற போர்வையில் மிகப்பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அதன் பலாபலனை இன்று நாங்கள் அனுபவிக்கத் தொடங்கி இருக்கின்றோம். இதுவரைக்கும் வடமாகனத்தில் 750க்கு மேற்பட்ட கடலட்டை பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது.

இந்தப் பண்ணையின் மூலம் கடற்றொழிலாளர்கள் என்ன வருமானத்தை பெற்றனரா, அவர்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கப்பட்டுள்ளதா, சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கின்றதா, இல்லையா என்பதை தெளிவான ஆய்வினை மேற்கொண்டு எதிர்காலத்தில் கடலட்டைப் பண்ணை வளர்ப்பை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அதிகாரிகள், வடமாகாண கடற்றொழில் நீரியியல் வளத்திணைக்களம், கடலோரப் பாதுகாப்பு திணைக்களம், பிரதேச செயலகங்கள், கடற்றொழில் அமைச்சர், ஜனாதிபதி என்பவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். இது மக்கள் நலன் சார்ந்த பிரச்சினை. அந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் - எதிர்காலம் - எப்படி இருக்கும் என்பதையும் இதன்போது நீங்கள் பார்க்க வேண்டும்.

வெளிநாட்டவர்களிற்கு அடிமையாகித் தொழில் செய்கின்ற சூழல் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்றது.

வடக்குக் கடலை விற்று, முதலீட்டைப் பெற்று இலங்கையில் இருக்கின்ற கடனை அடைக்க டொலரை கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

நாங்கள் உங்களிடம் தயவாக கேட்பது எங்கள் கடலில் நாங்கள் உழைத்து மக்களுக்கு சுத்தமான புரதமான மீனை கொடுப்பதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

எங்கள் கடலை வைத்து ஏற்றுமதி மூலம் டொலரை பெற வேண்டுமாக இருந்தால் கடற்றொழிலாளர் குடும்பங்களும் சாவினை நோக்கியே நகரும்.

கடலட்டை குஞ்சு பிடித்தல் என்பது கடற்சூழலுக்கு பாதிப்பான விடயம். கடலட்டைக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் இடையே ஒரு சங்கிலித் தொடர் இருப்பதனாலேயே மீன் இனங்கள் அந்தப் பிரதேசத்தில் வருவதும் வாழ்வதும் உறுதியாக இருக்கின்றது.

அண்டை நாடான இந்தியாவில் கடல் அட்டை பிடிப்பதற்கும் கடல் அட்டை வளர்ப்பதற்கும் தடை.

இலங்கையில் மாத்திரம் கடலட்டை குஞ்சுகளை பிடித்து பண்ணையில் விட்டு அதிக லாபத்தை பார்க்கின்றார்கள். அந்த குஞ்சுகளை கடலில் விட்டு அட்டைப் பண்ணையை வளைத்து அதிக லாபம் பெற முடியாது என்பது மீனவ சமூகம் நிதர்சனமாகக் கண்ட உண்மை. அந்தப் பண்ணையில் வளர்க்கப்படுகின்ற கடலட்டைக்கு சந்தை கேள்வி இல்லை என்பதை தெளிவாக கூற விரும்புகின்றோம். இந்த கடலட்டைப் பண்ணைகளை மட்டுப்படுத்த வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வெளிநாட்டுகளுக்கும் எங்கள் காணிகளை கொடுத்து எங்கள் சமூகத்தை அடிமையாக்க வேண்டாம் என்ற செய்தியையும் துறை சார்ந்த அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். எதிர்காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கோ வடமாகாண மக்களுக்கோ கடலுவு மீன்கள் கிடைப்பது மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

கடலட்டை பண்ணையாளர் சங்கம் என்பதை உருவாக்கி கடலையும் கடல் பிரதேசத்தையும் அவர்கள் கையில் எடுக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கிராமிய கடற்றொழில் அமைப்பு இருக்கின்றது. கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன.

அவர்களோடு இணைந்து செயல்படாமல் தனியான முறையிலே கடலட்டை சங்கத்தை உருவாக்கி மீனவ சமூகத்திற்குள் பிரச்சினைகளையும் விரிசல்களையும் உண்டு பண்ணுவதற்குரிய செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

கடலட்டை பண்ணை அமைக்க சங்கங்கள் அனுமதி வழங்கும்போது நன்கு பரிசீலித்து அனுமதி வழங்குங்கள். கடலட்டை பண்ணைகளின் புதுவிதமான தொழில்நுட்பம், அதனுடைய சாதக, பாதக பிரச்சினைகளை மக்களுக்கு புரியாமல் 10 லட்சம் ரூபா, 15 லட்சம் ரூபா எனக் கூறி விற்கலாம் என்ற மாயைக்குள் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

சீன நாட்டுக்கு எங்களுடைய கடல் வளத்தை கொடுப்பதாக இருந்தால் அதற்கு எதிராக நாங்கள் வடக்கு கடற்றொழில் சமூகமாக போராடுவோம். யாழ்ப்பாணத்திலே அரியாலை பிரதேசத்தில் கடலட்டை குஞ்சு உற்பத்தி செய்யும் சீன நிறுவனம் இருக்கின்றது. அதனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. சீன நாடாக இருந்தாலும் சரி, எந்த நாடாக இருந்தாலும்சரி, எங்களுடைய கடற்பிரதேசங்களை எங்களுடைய கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி அவர்களுக்கு வாழ்வாதாரத்தை செய்ய வேண்டுமே ஒழிய வெளிநாடுகளுக்கு வழங்குவதை முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம்.

கடற்றொழில் அமைச்சர் யாழ்ப்பாணம் வரும்போது நாங்கள் நேரடியாக சென்று எங்களுடைய கருத்தை கூறுவோம் - என்றார்.

## மகசின் சிறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மகசின் சிறையில் 13 தமிழ் கைதிகள், உண்ணாவிரதத்தைத் தொடர்கிறார்கள். உண்ணாவிரதத்தைக் கைவிட, சட்ட மாஅதிபரின் தலையீட்டு உறுதிமொழியைக் கோருகிறார்கள்.

அரசாங்கத்தின் அறிவுறுத்தல் இன்றி, சட்டமா அதிபர் தலையிட மாட்டார் என அவர்களுக்குச் சொன்னேன்.

ஆகவே ஜனாதிபதியுடன் கடந்த சனிக்கிழமை இவ்விவகாரம் பற்றியும் நடத்திய பேச்சு விவரங்களைக் கூறினேன்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வருவதற்கு முதல் காத்திரமான நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கடப்பாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறது என வலியுறுத்தி உள்ளேன்.

இவ்வரிசையில் முதல் நடவடிக்கையாக அரசியல் கைதிகள் விடுதலையையே நாம் கருதுகிறோம்.

எஞ்சியிருக்கும் தமிழ் கைதிகளை பிணை, வழக்கு வாபஸ், பொதுமன்னிப்பு ஆகிய முறைகளில் விடுவிக்கும் காலம் உதயமாகி விட்டது. நம்பிக்கையுடன் இருக்கும்படி வலியுறுத்தினேன்.

## வழிபாட்டுக்குரிய 11 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட துணவி பகுதியில் வாள்களை பயன்படுத்தி கட்டுச் சொல்லும் கோவில் ஒன்றில் வாள்களை உடைமையில் வைத்திருப்பதாக யாழ்ப்பாணம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அதிரடிப்படையினர், 11 வாள்களை கைப்பற்றியதோடு குறித்த வாள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 22 வயது அதே பகுதியைச் சேர்ந்த இளைஞனை கைது செய்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இவை தமது பூசை வழிபாடுகளிற்கு பயன்படுத்தப்படுவன எனக் கைதான இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரின் தந்தையே ஆலயத்தில் பூசைகளில் ஈடுபடுவர். குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## இந்தியா செல்ல முயன்ற ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சந்தேகிக்கப்படும் 08 பேர் மன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பேசாலை, குடியிருப்பு கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான வகையில் கடற்கரையில் தங்கியிருந்த குழுவினரை அவதானித்து கடற்படையினர் அவர்களைச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் மற்றும் மூன்று சிறுவர்கள் என இவர்கள் எட்டுப் பேரும் சட்டவிரோதமாக நாட்டிலிருந்து குடிபெயர்வதற்காகக் கடற்கரையில் தங்கியிருந்தனர் என்று சந்தேகம் எழுந்ததாக கூறப்படுகிறது.

அவர்கள் 08 பேரையும் கைது செய்த கடற்படையினர் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இவர்கள் மொறவெவ, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் பருத்துத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## மஹிந்தவைக் கொல்ல .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபரால் மேல்நீதிமன்ற நீதிபதி மஹேஹன் வீரமனிடம் இந்த குற்றப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

குற்றபத்திரங்களை ஆராய்ந்த நீதிபதி, பிரதிவாதிகளின் கைவிரல் அடையாளங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டபுள்ளே கொலை தொடர்பில் லக்ஷ்மன் குரேவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

லக்ஷ்மன் குரேவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க சட்டமா அதிபர் திணைக்களம் தவறிய நிலையிலே அவர் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதிகளுக்காக மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தங்கள் பிரகாரம், இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு பிணையளிக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றுக்கு இருப்பதாக குறிப்பிட்டு பிணை கோரி வாதங்களை முன் வைத்தனர்.

பிரதிவாதிகள் கடந்த 13 வருடங்களாக விளக்கமறியலில் இருக்கும் நிலையில் அதனை விசேட காரணியாகக் கருதி பிணையளிக்குமாறு அவர்கள் கோரினர். எனினும் வழக்குத் தொடுநர் குறித்த கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு முன் வைத்தது.

இந் நிலையில் பிணைக் கோரிக்கை தொடர்பில் எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி தனது தீர்மானத்தை அறிவிப்பதாக நீதிபதி மகேன் வீரமன் அறிவித்து வழக்கை அன்றைய தினம் வரை ஒத்தி வைத்தார்.

முன்னதாக முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே படுகொலை வழக்கிலும் பொலிஸ் அத்தியட்சர் லக்ஷ்மன் குரே பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், அவரை அண்மையில் கம்பஹா மேல் நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாடு செய்த அந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் பதாகைகளுடன் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை போரம் மற்றும் திருகோணமலையில் உள்ள மனிதாபிமான வள நிலையம் ஆகிய அலுவலகங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள ஆவணங்கள் திருடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இறுதியில் மனித உரிமை ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயத்தில் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.

## 25 ஆயிரம் அரச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் ஒரேயடியாக ஓய்வு பெறுவார்கள் என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக வரையறுப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை அமல்படுத்தும் சுற்றறிக்கை நேற்றுறு வெளியிடப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், இந்த எண்ணிக்கையிலான அரச ஊழியர்கள் ஓய்வு பெறுவர் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் ஓய்வு பெறும் வயதை 65 ஆக அரசு உயர்த்தியிருந்தமையை அடுத்து, 60 வயது தாண்டியும் பணியில் இருந்த பல்லாயிரக் கணக்கானோர் இப்போது ஓய்வு பெறும் வயது 60 ஆகக் குறைக்கப்பட்டமையைத் தொடர்ந்து இந்த டிசெம்பர் 31 உடன் ஒரே சமயத்தில் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர்.



# இனப்படுகொலை ஒரு பன்னாட்டுக் குற்றமாகும் பேரினவாதத்தால் தென்தமிழீழம் சுருங்குகிறது!

## ஐ.நா. கவன ஈர்ப்பு போராட்டத்தில் கல்முனை கணேஷ் ஆவேசம்



(வி.ரி. சகாதேவராஜா)

1948 டிசெம்பர் 09 இல் உருவான ஐ.நா. சபையின் 260 ஆவது இலக்க தீர்மானத்தின் படி இனப்படுகொலை ஒரு பன்னாட்டு குற்றமாகும். ஆனால் இதனை தொடர்ச்சியாக இலங்கை பேரினவாதம் முன்னெடுத்து வருகின்றது. இதனால் தென் தமிழீழம் சுருங்கிவருகின்றது. தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும்.

– இவ்வாறு ஐ.நா. கவன ஈர்ப்பு போராட்டத்தில் உரையாற்றிய மாணவ மீட்பு தலைவரும் மனித உரிமை சமூக செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் தெரிவித்தார்.

அனைத்து உலக மனித உரிமை ஸ்தாபனம் மற்றும் இனப் படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள் கூட்டமைப்பு இணைந்து ஐ.நா. கூட்டத்தொடர் நடக்கும் மண்டபத்துக்கு முன்பாக முருகதாஸ் தலைமையில் கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

அந்தப் போராட்டத்தில் இலங்கையில் இருந்து சென்ற பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

அங்கு மனித செயற்பாட்டாளர் கணேஷ் மேலும் உரையாற்றுகையில் –

இனப்படுகொலை என்பது தேசிய இனம் ஒன்றின் வாழ்வைத் தாங்கி நிற்கும் முக்கியமான மூலாதாரமாகும். அந்த இனம் தாமாகத் துடைத்தெறிந்து போவதை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அறிஞர் லெஸ்னின் வரைவிலக்கணம் கூறுகின்றார். அது ஒரு மனித உயிரோடு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. மாறாக அரசியல் பொருளாதார கலாசாரம் சார்ந்ததாகும்.

இலங்கையில் கடந்த 60 இற்கும் மேற்பட்ட வருடங்களாக இந்த இன அழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால் 1950 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாதம் இந்த சிங்கள ஆக்கிரமிப்பை தென் தமிழீழத்தில் முதலாவதாக மேற்கொண்டது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலேயே குடியேற்றத் திட்டத்தை ஆரம்பத்தில் மேற்கொண்டது. அங்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் காணிகள் சூறையாடப்பட்டன. புதிதாக ஐம்பது குடியேற்றக் கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக சிறுபான்மைக்கு எதிராக அந்த நடவடிக்கை முதன்முதலிலேயே அரங்கேறியது.

1911 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட சனத்தொகையை எடுத்துக் கொண்டால் ஏழு சத வீதமாக இருந்த சிங்களவர் இன்று 39 விதமாக அதிகரித்து இருக்கின்றது. அன்று 24 வீதமாக இருந்த தமிழர்கள் இன்று 18 வீதமாகக் குறைந்து இருக்கின்றார்கள்.

1956 ஆம் ஆண்டு எமது தமிழ் மொழியை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று மொழிப்பிரச்சினை கொண்டு வரப்பட்டது.

வடக்கு கிழக்கில் பல ஆயிரம் படுகொலைகள் இடம்பெற்றன . யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்ட எல்லை கிராமங்களில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. வடக்கு கிழக்கு தமிழர் தாயக மண் இல்லாத ஒழிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

2009 இல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். இதுவரைக்கும் அதற்கு நீதி இல்லை. அதற்கு நீதி வேண்டும் என்று தங்களது பிள்ளைகளைத் திருப்பித் தர வேண்டும் என்று வடபுலத்திலே தாய்மார்கள் 2000 நாள்களாகப் போராடி வருகிறார்கள். இதுவரைக்கும் எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. சிங்கள பேரினவாதம் எமக்கு தீர்வு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சர்வதேசம் ஒன்று தான் எமக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். ஆர்மேனியா, கிழக்கு திமோர், மியான்மார் போன்ற பகுதிகளிலே இப்படியான அடக்குமுறை இடம்பெற்றன.

அந்த வகையிலே அவர்கள் தொடர்ச்சியாகப் போராட வேண்டிய ஒரு காலமாக இருந்தது. இந்த நிலைப்பாடு இலங்கையிலும் சிறுபான்மை மக்களுக்கு தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. பேச்சுகள் அன்றும் இன்றும் கிழித்து எறியப்பட்டன. அதை தடுத்து அடக்கி ஒதுக்கியதே வரலாறு.

எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒரே நோக்கம் எமக்காக ஒரு தேசம் சுய நிர்ணய ஆட்சி என்பதாகும். அதற்காக நாம் ஒற்றுமையாக கல்வியறிவால் இணைந்து போராட வேண்டி இருக்கின்றது. உலகில் தமிழர் தேசத்தை நியாயமான தேசமாகமிளிரச்செய்யவேண்டும். நீதிக்கானவழிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபடுவோம். – என்றார்.

# ஆசியக் கிண்ணத்தை இலங்கை சுவீகரிக்க நாமலே காரணமாம்!

## மதுர விதானகே கூறுகின்றார்




இலங்கை கிரிக்கெட் அணியின் ஆசியக் கிண்ண வெற்றியின் பின்னணியில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இருக்கிறார்

என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

இரண்டரை வருடங்களாக நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத்துறைக்கு ஆற்றிய சேவையின் பெறுபேறுகள் தற்போது கிடைத்து வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலின்றி திறமையானவர்களுக்கு விளையாட்டை முன்னெடுப்பதில் நாமல் ராஜபக்ஷ பெரும் பங்காற்றினார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி வழங்குவது மிகவும் பொருத்தமானது என்றும் மதுர விதானகே மேலும் தெரிவித்துள்ளார்.

# கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் ஆரம்பம்!

இலங்கையின் கடனை மறுசீரமைக்க சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் நிதி ஆலோசகர் லசார்ட் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உடன்பாட்டை எட்டுவதே அதன் நோக்கமாகுமென பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து தேவையான நிதி நிவாரணங்களைப் பெறுவதற்கு நாட்டில் கடன் மறுசீரமைப்பு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம், நிதி ஆலோசகர்களான 'லாசார்ட்' இன் சேவைகளைப் பெறுவதற்கு இலங்கை அதிகாரிகள் தீர்மானித்ததுடன், சர்வதேச சட்ட ஆலோசனை நிறுவனமான 'கிளிஃபோர்ட் சான்ஸ்' நிறுவனமும் நாட்டில் கடன் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ஆதரவளித்து வருகிறதெனத் தெரிவிக்கப்படுகிறது.



ரமேஷ் பத்திரன தெரிவிப்பு

இலங்கையின் கடன் 850 கோடி டொலர் முதல் 1,000 கோடி டொலர்களைத் தாண்டியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# மூலப்பொருள்கள் பற்றாக்குறையால் 10 ஆயிரம் ஹோட்டல்களுக்கு பூட்டு

ரொட்டி மாவு, முட்டை, இறைச்சி மற்றும் மீன் பற்றாக்குறையால் சுமார் 10 ஆயிரம் ஹோட்டல்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பற்றாக்குறையால் அரசு நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் பாதியளவு மூடப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரொட்டி மாவு, முட்டை, இறைச்சி மற்றும் மீன் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு நிகழ்வுகளுக்கான கேட்டரிங் சேவைகளும் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோழி இறைச்சி மற்றும் முட்டை விலைகள் மீண்டும் எகிறலாம்?

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலையை மீண்டும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறியுள்ளார்.

அரசாங்கம்தலையிட்டுசலுகைகளைவழங்கினால் மட்டுமே விலையைக் குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தற்காலிகமாக ஓட்டுநர் உரிமத்தின் காலம் நீடிப்பு

6 மாத காலத்துக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமத்தை ஓராண்டு காலத்துக்கு நீடிக்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் முடிவு செய்துள்ளது.

மாவட்ட அலுவலகத்திற்கோ அல்லது கொழும்பில் உள்ள அலுவலகத்துக்கோ வந்து ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.09.2022இல் வெளியிடப்பெற்றது.